www.tamilarangam.net



# உலக வாழ் தமிழ் மக்களின் கவனத்திற்கு!!!

===================================

சென்ற வாரம் வெளியாகிய "உலகத்தமிழர்களை திடுக்கிட வைத்த உண்மைச் சம்பவம்."
பாரிஸ் மாநகரில் என்ற தலைப்பு துண்டுப் பிரசுரத்தின் தொடர்ச்சியே இது.
விழுது கலை ஊக்குவிப்பு மன்றத்தின் தலைவர் சந்திரதாஸ், மன்ற உறுப்பினர்கள் பலரை வற்புறுத்தி பாலியல் குற்றம் புரிந்த காரணத்தால் பொலிசாரால் தேடப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

22-03-2003 அன்று மாலை 7 மணியளவில், லாச்சப்பல் என்னுமிடத்தில் பகிரங்கமாக மக்கள் முன்னிலையில் உயிருடன் கம்பத்தில் கட்டப்பட்டு, கழுத்தில் அவர் புரிந்த குற்றங்களும் எழுதி தொங்கவிடப்பட்டிருந்த குறுகிய நேரத்தில், பொலிசாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் அநேகமான தமிழ் மக்களுக்கு தெரிந்ததேயாகும்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்திரதாஸ், பொலிசாரின் விசாரணையின் போது தனது குற்றங்களை முற்று முழுதாக ஒப்புக்கொண்டுள்ளார், என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை குற்றங்களை ஒப்புக்கொண்ட
" சந்திரதாஸ் விடுதலையாகிவிட்டார்" என்று மக்களிடையே பரவி வரும் செய்திகள் வெறும் வதந்திகளேயாகும்.
சந்திரதாஸை மக்கள் முன் பகிரங்கபடுத்தியதின் தொடர்ச்சியாக, எம்மை சில அமைப்புக்கள் என்றும் இளஞர் குழுக்கள் என்றும், மக்களிடையே பேசப்பட்டு வருகிறது. இப்பேச்சுக்களை நிராகரித்து, நாம் தனிப்பட்ட நபர்களே என்று உறுதியாகக் கூறுகிறோம். இச்சம்பவத்திற்கும் வேறு சில அமைப்புக்களுக்கும், இளஞர் குழுக்களுக்கும், எதுவித சம்மந்தமும் இல்லையென்று திட்ட வட்டமாகக் கூறுகிறோம். குற்றவாளியான சந்திரதாஸை மக்களுக்கு இனங்காட்டிய போது, பக்கத்தில் இருந்த பத்திரிகையாளர்களும், தமிழ் தொலைக்காட்சியாளர்களும், இச்செயலை பார்த்தும் பத்திரிகையில் எழுதவும், தொலைக்காட்சியில் ஒலி ஒளி பரப்பவும் மறந்து விட்டார்களோ? அல்லது சந்திரதாஸுக்கு பயந்து விட்டார்களோ? புரியவில்லை!
பாரிஸில் பணிபுரியும் செய்தி வெளியிட்டாளர்களே! இனியாவது தயவுசெய்து, செய்தித் தணிக்கையை நிறுத்துங்கள். பகிரங்கமாகும் உண்மைச்சம்பவங்களை மக்களுக்கு வெளிப்படுத்துங்கள்.

அன்பான தமிழ் மக்களே இத்தகைய குற்றச்செயல்கள் தெரிந்தால் பகிரங்கப் படுத்துங்கள்.
தவறுகள் திருத்தப்படவேண்டும் குற்றங்கள் தண்டிக்கப்படவேண்டும்.

தமிழனாகிய இவர் புரிந்த இவ் இழிச்செயலை மக்கள் முன்னிலையில் வெளிச்சத்திற்கு கொண்டு வந்ததால், பல்வேறு இன மக்கள் வாழுகின்ற சமூகத்தில் தமிழினம் அந்நியப்படுத்தப்படும் என்று *சில புத்தி கூடியவர்களின்* கருத்து மாற்றப்படவேண்டும். ஏனெனில் இவ் இழிச்செயலை செய்தவன் தமிழன் என்றால், தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்தவர்களும் மானமுள்ள தமிழர்கள்தானே. குற்றவாளியைக் கம்பத்தில் கட்டிய செயலை தவறு என்று தூற்றுபவர்களே! உங்கள் குடும்பத்தவர்களும் இவ் இழிச்செயலால் பாதிக்கப் பட்டிருக்கலாமோ! என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். எம் இனப்பற்று தாய் தந்தைப்பற்று சகோதரப்பற்றிருந்தால், இவரை பகிரங்கப் படுத்தியதை தூற்றுபவர்களாக இருக்க மாட்டீர்கள்.
உங்கள் குடும்பத்தில் பிரச்சனைகள் வந்தால் துடிக்கிறீர்கள், ஆனால் அயல் குடும்பத்தில் பிரச்சனைகள் வரும் போது உணர்வின்றி மரக்கட்டைகளாக இருக்கிறீர்களே! ஏன்?????
பாரிஸில் முக்கிய பதவிகளில் இருக்கும் சிலர், பொலிஸ் விசாரணைக்குப் பயந்து தலைமறைவாகி இருப்பதாக சில தகவல்கள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

போற்றுபவர்கள் போற்றட்டும் தூற்றுபவர்கள் தூற்றட்டும்.
எதிர் காலத்திலும் தவறு செய்தவர்கள்(செய்பவர்கள்) தண்டிக்கப்படுவார்கள்.

உணர்வுள்ள தமிழ்மக்கள்

30 - 03 - 2003
பாரிஸ்(பிரான்ஸ்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்